**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 23-06-2023**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-06-23 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-06-24 | 2023-06-25 | 2023-06-26 | 2023-06-27 | 2023-06-28 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 3.0 | 2.0 | 3.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 34.0 | 35.0 | 35.0 | 35.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 24.0 | 25.0 | 25.0 | 25.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 60 | 60 | 60 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 40 | 40 | 30 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 10 | 12 | 12 | 14 | 14 |
| காற்றின் திசை (கோணம்) | 250 | 270 | 270 | 270 | 270 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

ஜூன் 24,25,26,27 தேதிகளில் லேசானமழை பெய்ய வாய்ப்புள்ளது. வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 34 முதல் 35 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 முதல் 25 டிகிரி செல்சியஸ் ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 60 முதல் 70 விழுக்காடாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 10 முதல் 14 விழுக்காடாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 10 முதல் 14 கி.மீ வரை தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் ஜூன் 28முதல் ஜூலை 4, 2023 வரை மழையானது இயல்பை விட அதிகமாகவும், வெப்பநிலையானது இயல்பாகவும் காணப்பட வாய்ப்புள்ளது. தகுந்த பருவத்திற்கேற்ற நுண்ணுயிர் உரங்களை நெற்பயிருக்கு உபயோகிப்பதன் மூலம் ரசாயன உர பயன்பாட்டை

| |
|---|
| 25% குறைத்து கொள்ளலாம். இவ்வாறு செய்வதன் மூலம் பயிர் வளத்தை மேம்படுத்தி மண் மாசுபடுவதை தடுக்கலாம். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் பூச்சி மற்றும் பூஞ்சாணகொல்லியுடன் ஒட்டும் திரவம் கலந்து தெளிக்கவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்பொழுது நிலவி வரும் சூழ்நிலை காரணமாக நெற்பயிரில் இலைமடக்கு புழுவின் தாக்கம் தென்படுகிறது. தாக்கத்தின் அறிகுறியாக இலைகள் நீளவாக்கில் மடிக்கப்பட்டிருக்கும், புழுக்கள் இலைகளின் பச்சை நிற திசுக்களை சுரண்டுவதால் இலைகள் வெண்மையாக மாறி காய்ந்துவிடும். தீவிர தாக்குதலின்போது முழு நெல் வயலும் வெண்மையான நிறத்தில் காய்ந்தது போல் காட்சியளிக்கும். இதனை கட்டுப்படுத்த பைபிரினில் 80% WG 20-25 கி/ஏக்கர் என்ற அளவில் தெளிக்க வேண்டும். |
| நிலக்கடலை | தற்பொழுது நிலவி வரும் சூழ்நிலை காரணமாக நிலக்கடலையில் சுருள்பூச்சி தாக்கம் தென்படுகிறது. தாக்கத்தின் அறிகுறியாக இரண்டு அல்லது மூன்று இலைகளை ஒன்றாக பிணைந்து காணப்படும். புழு இலையின் திசுக்களுக்கிடையே ஊடுருவிச் சென்று பச்சையத்தைச் சுரண்டி உண்பதால் தாக்கப்பட்ட இலைகள் காய்ந்தும்,சேதம் அதிகமாகும் நிலையில் தாக்கப்பட்ட பயிர்கள் தீயினால் எரிக்கப்பட்டது போன்றும் காணப்படும். இதனை கட்டுப்படுத்த விளக்குக்கவர்ச்சி பொறியை ஏக்கருக்கு 5 வீதம் அமைத்து அந்துப்பூச்சியை கவர்ந்து அழிக்கலாம் அல்லது மீத்தைல்டெமேட்டான் 25% EC 400 மி.லி /ஏக்கர் என்ற அளவில் தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | தென்னை மரத்தை சுற்றி அமைக்கப்பட்டுள்ள வட்டப்பாத்திகளில் சணப்பை பயிரை விதைப்பு செய்து பூக்கும் தருவாயில் மடக்கி உழுது விடலாம். |
| வாழை | வரும்நாட்களில் காற்றின் வேகம் மணிக்கு 10 கிலோமீட்டருக்கும் அதிகமாக வீசக்கூடும் என்பதால் 5 மாதமுள்ள வாழை மரங்கள் சாயாமல் இருக்க முட்டு கொடுக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | பசு மாடுகளுக்கு அகத்தி, சுபா புல்,சீமை அகத்தி, மல்பெரி மற்றும் வேலிமசால் போன்றவற்றை ஒவ்வொன்றிலிருந்தும் 0.5 கிலோ வீதம் ஒரு மாட்டுக்கு 2.5 கிலோ தினசரி கொடுக்க வேண்டும். கால்சியம் டானிக் 50 மி.லி மற்றும்TANUVAS தாதுஉப்பு கலவை 40 கிராம் வீதம் கொடுத்தால் பால் உற்பத்தியும், பாலில் கொழுப்பு சத்தும் அதிகரிக்கும். மேலும் அடர்தீவன தேவையின் அளவைக் குறைத்து செலவை குறைக்கலாம். |
| வெள்ளாடு | செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு PPR என்ற தடுப்பூசியை ஒரு ஆட்டுக்கு ஒரு மி.லி வீதம் தோலுக்கடியில் போட வேண்டும். இந்த தடுப்பூசியை போடுவதால் PPR என்ற நோயின் தாக்கத்தால் ஏற்படும் கழிச்சல்,பேதி, காய்ச்சல், சளி மற்றும் இறப்பு ஆகியவற்றை தடுக்கலாம். |